# 2019 வைகாசி மாதத்திற்கான இறைவேண்டல் மற்றும் நடுநிலை செபத்திற்கான கைக்கொடுத்தல்

***"எங்களோடு தங்கும்."*** *(புனித லூக்கா 24:29)*

கடந்த பாஸ்கா ஞாயிறு அன்று நிகழ்ந்த கொடூரமான நிகழ்ச்சி. அதில் எமது கிறிஸ்தவ சகோதரர்களும் வெளிநாட்டு உல்லாச பிரயாணிகளும் மற்றும் அநேகர்கள் மரணத்திற்கு உள்ளாகினார்கள். அதேபோல அநேகர் காயமுற்று வைத்தியாசாலைகளில் சிகிச்சை பெற்று வருகிறார்கள் என்பது நாம் அறிந்த விடயமாகும். அதேபோல மேலும் இப் பயங்கரவாதிகள் எமது நாட்டினுள் மறைந்து இருந்து மேலும் அழிவுகளை ஏற்படுத்த பார்த்துக் கொண்டும் இருக்கின்றார்கள்.

கிறிஸ்தவர்களும், புபுது மக்களும் நடுநிலை மற்றும் இறைவேண்டலின் ஊழியர்கள் என்ற வகையில் நீங்களும் நானும் இதைவிட முக்கியத்துவத்துடனும், அர்ப்பணிப்புடனும் பரிசுத்த ஆவியானவருக்கு விழிப்புற்று மனம்வருந்தி எமது தேசத்திற்காக நிரந்தரமும் செபிப்பதற்கு முன்வருவோம். அதேபோல இக் காலகட்டத்தில் எமது பரிசுத்த ஆவியானவரின் திருவருகை திருவிழாவிற்கான தொடர் செபம் ஆரம்பமாகி உள்ளது. பொறுப்பு வகிப்பவர்கள் அறிவிக்கும் வரை தற்போது 24 மணித்தியாலமும் குறிப்பிடப்பட்டுள்ள சீடத்துவ சங்கங்கள், வீடுகளில் இருந்து தனிமையில் செபிக்குமாறு அறிவித்து இருக்கிறார்கள்.

இறைவேண்டலின் ஊழியர்களாகிய நீங்களும் நானும் நிரந்தரமும் தூய ஆவியானவருக்கு விழிப்புற்று, எமது நடுநிலை செபத்தை உபவாசத்துடன் நற்செயலினுடாகவும் "அப்பா தந்தையை – அப்பா அன்னையை" பால் நோக்கி இருப்போம்.

**"எனது பெயரைப் போற்றிடும் என் மக்கள் சிறுமையுற்று தங்கள் பாவங்களிலிருந்து மனம்வருந்தி இரந்து மன்றாடி, என் திருமுகத்தை நாடினால் வானகத்திலிருந்து அவர்களது மன்றாட்டுகளைக் கேட்டு அவர்கள் பாவங்களை மன்னித்து அவர்களது நாட்டுக்கு நலன் அளிப்பேன்."**

(2குறிப்பேடு 7:14))

(தினமும் வாசிக்கவும் திருப்பாடல் 140, 142, 143, 144, 146, 116, 91)

**முதலாம் வாரம்:- தியானவாசிப்பு – புனித லூக்கா 24: 28-35**
வேண்டுதலுக்கான விசேட நோக்கு

பயங்கரவாத தாக்குதலினால் உயிரிழந்த ஆன்மாகளுக்காவும் காயமுற்று வைத்தியாசாலைகளில் சிகிச்சை பெற்று வருகிற அனைவருக்காகவும், உயிரிழந்தவர்களின் உறவினர்களுக்காகவும் துயரத்தில் இருக்கின்ற அனைவருக்காகவும், மேலும் மறைந்து இருந்து மேலும் அழிவுகளை ஏற்படுத்த பார்த்துக் கொண்டு இருக்கின்ற பயங்கரவாதிகளை சட்டத்தின் பிடிக்கு அகப்படுவதற்காகவும், அதற்காக செயல் அமைப்பில் ஈடுபட்டு இருக்கின்ற அரச அதிகாரிகள் உட்பட பாதுகாவல்துறை, மூவித படைகள் அனைவருக்காவும்.

வேறுவேண்டுதல்கள்:-

- கர்தினால் அவர்கள் உட்பட அனைத்து குருத்துவ, கிறிஸ்தவ மக்களுக்காக சரியான முடிவுகளை எடுப்பதற்கு தேவையான பரிசுத்த ஆவியானவரின் ஒலி கிடைக்கும் முகமாக.

- சுவாமி அப்பாவுக்காகவும் அவர் நாட்டிற்காக செயல்படுத்திய வேலைத்திட்டம் செயல்படுத்த வாசல்கள் திறக்கப்படுவதற்காக
- இறைவாக்கினர் குழு, துணையாளர் குழு, சுசுமத குழு உள்ளிட்டபுதுவையில் பொறுப்பாளர்களாக பணியாற்றும் அனைவருக்காகவும், பரிசுத்த ஆவியானவரின் திருவிழா முன்கொண்ட சரியான படிகளை எடுப்பதற்கு ஞானம் கிடைக்கும் முகமாக.
- ஏனைய வேண்டுதல்கள்.........

**இரண்டாம் வாரம்:- தியானவாசிப்பு 1 கொரிந்தியர் 15:51-58**

வேண்டுதலுக்கான விசேட நோக்கு :-

எமது நாட்டிலும் பலவித நாடுகளில் இருக்கின்ற பயங்கரவாதம் முழுமையாக அகற்றும்படியாக (20 நிமிடம்)

வேறு வேண்டுதல்கள்:-

- பரிசுத்த தருத்தந்தைக்காக
- தொடர் செபத்தில் ஈடுபட்டிருக்கின்ற அனைவருக்காகவும்.
- பயங்கரவாதிள் சட்டத்தின் பிடிக்கு அகப்படுவதற்காகவும், அதற்காக செயல் அமைப்பில் ஈடுபட்டு இருக்கின்ற அரச அதிகாரிகள் உட்பட பாதுகாவல்துறை, மூவித படைகள் அனைவருக்காவும்.
- ஜனாதிபதி உட்பட அமைச்சர்களுக்காக
- ஏனைய வேண்டுதல்கள்.........

**மூன்றாம் வாரம்:- தியானவாசிப்பு– 1 கொரிந்தியர் 15:29**

வேண்டுலுக்கான விசேட நோக்கு:-

- போதை பொருள் போதைவஸ்து உட்பட பலிவதமான உத்தியோகங்களில் ஈடுபட்டு இருக்கினற அனைவருக்காகவும் அவற்றை கொண்டு செல்லும் செயலில் ஈடுபடுபவர்களுக்காகவும், பல தேசிய நிறுவனங்கள், பாதாளக் குழு எமது நாட்டினின்று அகலும் முகமாக ( 20 நிமிடம்)

வேறு வேண்டுதல்கள்:-

- போதை பொருள் போதைவஸ்து உட்பட பலிவதமான துஂபிரயோகங்களுக்கு உள்ளாகி இருக்கின்ற அனைவருக்காகவும்.
- சிறுநீரக நோயினால், புற்று நோயினால் வாடும் அனைவருக்காகவும்.
- தொடர் செபத்தில் ஈடுபட்டு இருக்கும் அனைவருக்காகவும்.
- பாடசாலை பிள்ளை உட்பட ஆசிரியர் ஆசிரியைகளுக்காக
- ஏனைய வேண்டுதல்கள்.........

**நான்காம் வாரம் :- தியானவாசிப்பு– புனித யோவான் 14: 15-20**

வேண்டுதலுக்கான விசேட நோக்கு :- தேசத்திற்காக (20 நிமிடம்)

வேறு வேண்டுதல்கள்:-,

அப்பா தந்தையே அப்பா அன்னையே பெலயீனர்களாகிய, பாவிகளாகிய எம்மை குறித்து கருணை கொண்டருளும். எமது பாவங்களினால், அநியாயங்களினால் நாமே அழிவுக்கு உள்ளாகுவதுடன், எமது குடும்பங்களும், பிள்ளைகளும் எமது நாடும் அழிவுக்கு உள்ளாகின்றார்கள் என்பதை நாம் அறிவோம். அப்பா தந்தையே, உமது ஆவியானவரின் வல்லமையினால் எமது பாவத்தை எமக்கு காண்பித்து, மனம்வருந்தி எமது வாழ்வை புதிய நிலைக்கு உள்ளாகுவதற்கு எமக்கு உதவியருளும்.

**“இப்பொழுது நீங்களும் துயருறுகிறீர்கள்**
**ஆனால் நான் உங்களை மீண்டும் காணும் போது**
**உங்கள் உள்ளம் மகிழ்ச்சி அடையும்.**
**உங்கள் மகிழ்ச்சியை யாரும் உங்களிடமிருந்து நீக்கிவிட முடியாது.”**

(புனித யோவான் 16:22)

இறைவேண்டல் மற்றும் நடுநிலைசேவை